# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

22.08.2020 சனிக்கிழமை



நேற்றுச் சுடர் ஒளியில முன்பக்கத்தில் ஒரு செய்தி. பொலிஸ் மீது தாக்குதல் நடத்திய இளைஞன் கைது என்பதுதான் அந்தச் செய்தி. எமது களச் செய்தியாளர் ஊடாகக் கிடைத்தமையால் , அவருக்கு பொலிஸாரே வழங்கியதால் அதைப் பிரசுரித்திருந்தோம். ஆனால் சுடர் ஒளி பதிவேற்றப்பட்ட சில நிமிடங்களிலேயே பலரிடமிருந்து தொலைபேசி அழைப்புக்கள். என்ன இப்படிச் செய்தியைப் போட்டு விட்டீர்கள்? என்று கொஞ்சம் உரிமையோடு கண்டித்தார்கள். அதன் பின்னர் அரக்கப் பரக்க தீர விசாரித்த பின்னர்தான் உண்மை வேறென்று புரிந்தது. உண்மையில் பொலிசாரே அந்த 2



# அமைப்பாளர், பேச்சாளர் தொடர்ந்தும் நானேதான்!

## மணிவண்ணனும் விடுவதாயில்லை

யாழ்ப்பாணம், ஒக. 22

எனக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானம் ஜனநாயகத்திற்கு எதிரானது, இயற்கை நீதிக்கோட்பாட்டுக்கு எதிரானது என்பதனால் நான் தொடர்ந்து கட்சியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவிகளில் நீடிப்பேன் என சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்துள்ளார். 2

## 113 கிலோ எடையுள்ள தங்கூசி வலைகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஒக. 22

யாழ்ப்பாண நகரப் பகுதியில் கடற்றொழில் உபகரணங்கள் விற்பனை செய்யும் கடை ஒன்றிலிருந்து மீன்பிடிக்கு தடை செய்யப்பட்டுள்ள தங்கூசி வலைகள் நீரியல்வளத் திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டுள்ளன. 63 கிலோ கிராம் எடையுடைய ஒரு பொதியும் 50 கிலோ எடையுடைய இன்னொரு பொதியுமே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன. தங்கூசி வலை பாவித்து மீன்பிடிப்பது தடை செய்யப்பட்டுள்ள நிலையில் தங்கூசி வலை மூலம் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு வருவோர் நீரியல்வளத் 2

## இருட்டில் இலங்கை: விசாரணை துரிதம்!

கொழும்பு, ஒக. 22

நாடு தழுவிய ரீதியில் மின்சார துண்டிப்பு மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழு இன்று பத்தரமுல்லை பெலவத்தையிலுள்ள இலங்கை மின்சார சபையின் கட்டுப்பாட்டு மையத்துக்குக் கண்காணிப்புப் பயணம் மேற்கொண்டு விசாரணைகளை முன்னெ 2

## அடிகாயங்களுடன் முதியவரின் சடலம்

### கனகராயன்குளத்தில் மீட்பு

வவுனியா, ஒக. 22

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் அடிகாயங்களுடன் முதிவரின் சடலம் இன்று காலை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் உள்ள வயல்வெளியில் சடலம் ஒன்று இருப்பது தொடர்பாக கனகராயன்குளம் பொலிசாருக்குத் தகவல் கிடைத்தது. சம்பவ இடத்துக் 2

## வெற்றிலைக்கூறின் விலை அதிகரிப்பு!

யாழ்ப்பாணம், ஒக. 22

சந்தையில் பாக்கு மற்றும் வெற்றிலைகளில் விலைகள் அதிகரித்துள்ளதை அடுத்து வெற்றிலைக்கூறின் விலையும் கணிசமாக அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. சில 2

## 4 மாதங்களுக்கு ரூ.950 பில்லியன்

### இடைக்கால கணக்கறிக்கை

கொழும்பு, ஒக. 22

இந்த வருடத்தின் இறுதி 4 மாதங்களுக்கான இடைக்கால கணக்கறிக்கை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது. இதன்படி அடுத்த நான்கு மாதங்களுக்கு 950 பில்லியன் ரூபா அரச செலவாக மதிப்பிடப்பட்டுள்ளது. 2021ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. எனவே எதிர்வரும் மாதங்களுக்கான அரச செலவீனத்தை கருத்தில் கொண்டு இந்த இடைக்காலக் கணக்கறிக்கை முன் வைக்கப்பட் டுள்ளது. (ம)

## கேப்பாபிலவில் 18 பேருக்கு கொரோனா

முல்லைத்தீவு, ஒக. 22

முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படைத்தள தனிமைப்படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தப்பட்டவர்களில் 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. அவர்கள் மேலதிக 2

## 56 ஆயிரம் இலங்கையர் தாயகம் திரும்பத் தயார்

கொழும்பு, ஒக. 23

கொரோனா வைரஸ் பெருந்தொற்றை அடுத்து சுமார் 56 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் தாயகம் திரும்பக் காத்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்றை அடுத்து பல்லாயிரம் இலங்கையர்கள் 2

## 'கோப்' நடவடிக்கை அடுத்த வாரத்தில்!!

கொழும்பு, ஒக. 22

9ஆவது நாடாளுமன்றத்தின் 'கோப்' எனப்படும் பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற குழு மற்றும் 'கோபா' எனப்படும் அரசாங்க கணக்குகள் தொடர்பான குழு உள்ளிட்ட தெரிவுக்குழுக்கான உறுப்பினர்களை நியமிக்கும் நடவடிக்கை அடுத்தவாரம் இடம்பெறவுள்ளது. இதற்கமைய பெரும்பாலும் அந்த நடவடிக்கை அடுத்த நாடாளுமன்ற அமர்வு இடம்பெறும் வியாழக்கிழமை அல்லது வெள்ளிக்கிழமை இடம்பெறலாம் என நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. 2

## புதினம் தெரியுமோ?

ஓட்டோச் சாரதியை மிருகத்தனமாக தாக்கிவிட்டு, கதையை மாற்றி ஊடகங்களுக்கு செய்தியை அனுப்பி விட்டனர். பொலிஸ்தரப்புச் செய்தி தானே, அதில் பிழையிருக் காது என ஊடகங்களும் அதை முதலில் பிரசுரித்துவிட்டன. பின்னர் மனித உரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்ட முறைப்பாட்டிலேயே சம்பவம் தொடர்பான உண்மைகள் வெளிவந்தன.
மக்களைக் காக்க வேண்டிய, சட்டத்தைப் பேணுவதை உறுதி செய்ய வேண்டிய பொலிசாரே இப்படி ரவுடிகள் போல அப்பாவியைத் தாக்கிவிட்டு, அதையே தலைகீழாக்கி ஊடகங் களுக்கு பொய்ச்செய்தியை அனுப்பி, தவறாக வழிநடத்த நினைப்பது மிக மோசனமான செயல். அத்தோடு கண்டனத்துக்கும் உரியது.
இப்படி கண்ணுக்கு முன்னால் நடந்ததையே மாற்றிச் சொல்கின்ற பொலிஸ்மீது மக்க ளுக்கு எப்படி நம்பிக்கை வரும்? எனவே சம்பவத்தை திரித்து, அப்பாவிச் சாரதிமீது பழி சுமத்தி தப்பிக்க நினைத்த பொலிசார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் சாமி படத்தில் 'நான் பொலிஸ் இல்லை பொறுக்கி' என்று சொல்வதை மக்கள் கொஞ்சம் மாற்றி "நீங்கள் பொலிஸ் இல்லை பொறுக்கி" என்று சொல்லும் நிலை வந்து விடும்.

– பட்சி

## 113 கிலோ எடையுள்ள...

திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்ற நிலையில் இன்றையதினம் யாழ்ப்பாண நகரப் பகுதியில் தங்கூசி வலை விற்பனை செய்யப்படுவதாக கிடைத்த இரகசியத் தகவலையடுத்து அங்கு விரைந்த நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் குறித்த கடையைச் சோதனை செய்தபோது மேற்படி வலைகள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## 56 ஆயிரம் இலங்கையர்...

வெளிநாடுகளில் இருந்து தாயகம் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். இதுவரை 23 ஆயிரத்து 723 பேர் இலங்கை திரும்பியுள்ள நிலையில் இன்னும் சுமார் 56 ஆயிரம் பேர் இலங்கை திரும்பக் காத்திருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## வெற்றிலைக்கூறின்...

இடங்களில் ஒரு கூறு வெற்றிலை 50 ரூபாவாகவும் விற்கப்படுகின்றது. மூன்று வெற்றிலை, ஒரு பாக்கு, புகையிலை மற்றும் சுண்ணாம்பு என்பன அடங்கிய வெற்றிலைக்கூறுதான் இவ்வாறு 50 ரூபா வரை விற்கப்படும் நிலை காணப்படுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

# அமைப்பாளர்...,

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் மற்றும் ஊடகப் பேச்சாளர் பதவியில் இருந்து நான் நீக்கப்பட்டுள்ளேன் என்று ஊடகங்களில் செய்தி வெளியாகி இரு தினங்களில் எனக்கு கட்சித் தலைவர் மற்றும் செயலரால் நான் பதவி விலக்கப்பட்டுள்ளேன் என்று கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. சட்ட நிபுணர்கள், கல்வியாளர்கள், ஆதரவாளர்களுடன் கலந்தாலோசித்து அதற்குப் பதில் கடிதம் அனுப்பியுள்ளேன். நான் பல்கலைக் கழகத்தில் சட்டப்பீடத்தில் கற்றுக் கொண்டிருந்த காலப் பகுதியில், போர் மௌனிக்கப்பட்ட பின்னர் எமது இனத்தின் கொள்கைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோருடன் கைகோர்த்துப் பயணித்தேன். 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் படுதோல்வியடைந்தோம். அதனையடுத்து பலர் எமது அமைப்பில் இருந்து விலகிச் சென்றனர். இருவர் துரதிஷ்டவசமாக இறந்து போனார்கள். அதன் பின்னர் தலைவர், செயலாளர், நான் ஆகிய நாங்கள் மூவருமே எமது அமைப்பைத் தொடர்ந்து முன்னெடுத்தோம். பல்வேறு அச்சுறுத்தல்கள், நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து எமது அமைப்பை கட்டியெழுப்பினோம். கடந்த உள்ளூராட்சி தேர்தலில் நாம் மகத்தான வெற்றியைப் பெற்றோம். அதன் பின்னர் எமது அமைப்பு உத்வேகத்துடன் முன்னோக்கிச் சென்றது.
இந்த நிலையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் காலத்தில் நான் இந்தத் தேர்தலில் தோல்வியுற்றால், தேர்தல் அரசியலில் இருந்து விலகுவேன் என அறிவித்திருந்தேன். இதனை எவரும் ஏற்றுக்கொள்ளவில்லை. நான் அரசியலில் இருந்து வெளியேறுவதை பலரும் விரும்பாதல் நான் தொடர்ந்து அரசியலில் பயணிப்பேன். எனக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் என் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டை நிராகரித்துள்ளேன். எனக்கு எதிராக எடுக்கப்பட்ட தீர்மானம் இயற்கை நீதிக் கோட்பாட்டுக்கு எதிரானது. மத்திய குழுக் கூட்டம் ஏன்? எதற்கு? எனக் கூறப்படாமல் கூட்டப்பட்டது. எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. என் தரப்பு நியாயங்களை கூற சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இது ஜனநாயகம் இல்லாதது. அறமற்ற செயற்பாடாகும். ஏனைய விடயங்கள் தொடர்பில் பொது வெளியில் பிரஸ்தாபிக்க விரும்பவில்லை. அது தொடர்பில் எனது பதில் கடிதத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளேன்.
எனக்கு எதிராக கட்சியினால் எடுக்கப்பட்டது ஜனநாயகப் பண்பற்ற ஒரு தீர்மானம் என்பதாலும், இயற்கை நீதி கோட்பாட்டிற்கும் எதிரானது என்பதனாலும் நான் தொடர்ந்து தேசிய அமைப்பாளராகவும், ஊடகப் பேச்சாளராகவும் செயற்படுவேன். எம் இனத்திற்காக உயிர் நீத்தவர்களை மனதில் நிறுத்தி அர்ப்பணிப்புடன் எனது செயற்பாடுகள் தொடரும் என ஆணித்தரமாகக் கூறுகிறேன்.
இன்று தேசியம் பேசுபவர்கள் பிளவுபட்டு நிற்பதனால், சிங்களக் கட்சிகள், தேசியம் பேசாதவர்கள் வெற்றி பெறுகின்றார்கள். அதனால் சிறுசிறு பிரச்சினைகளுக்காக பிரிந்து செல்வதை நான் என்றைக்கும் ஏற்கமாட்டேன்.
தேர்தல் காலத்தில் எனக்கு எதிராகக் கட்சியைச் சேர்ந்த சிலரால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில், கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கடந்த 9ஆம் திகதி எனது நண்பன் சட்டத்தரணி அர்ஜுனாவுடன் சென்று சந்தித்து முறையிட்டு சில ஆதாரங்களையும் முன் வைத்தோம். அது தொடர்பில் எனக்கு இதுவரை தலைவர் எந்த பதிலையும் தரவில்லை. எனக்கும் தலைவருக்கும் இடையிலான உறவு ஆழமானது. நான் என்றும் இணைந்து செயற்படுவேன். நான் எனது கட்சியுடன் நேசக் கரத்தை நீட்டுவேன். எனது கட்சி நிறுவனமயப்படுத்தப்பட்டு மக்கள் சேவைக்காக செயற்படும். அதற்காக தொடர்ந்து செயற்படுவேன் என உறுதி அளிக்கிறேன். காலங்கள் பல பதில்களை மக்களுக்கு தெளிவுபடுத்தும் என நம்புகிறேன் - என்றார். (ம-26)

# கலக்குகிறது கைலாசா!



புதுடெல்லி, ஓக. 22
சர்ச்சைக்குரிய சாமியார் நித்தியானந்தா, தான் உருவாக்கியுள்ள கைலாசா நாட்டுக்கென புதிய நாணயங்களை இன்று அறிமுகப் படுத்தினார். இந்த நாணயங்களை வைத்து உலகிலுள்ள 50க்கும் மேற்பட்ட இந்து நாடுகளுடன் வணிகம் செய்யவுள்ளேன் என்றும் அவர் குறிப்பிட்டார்.
ஆட்கடத்தல், கொலை வழக்கு, பாலியல் புகார் என பல்வேறு சர்ச்சைகளில் சிக்கிய சுவாமி நித்தியானந்தா கைலாசா என்ற நாட்டை உருவாக்கி வருகிறார். கைலாசாவுக்கென தனி வங்கியை அவர் முன்னதாக அறிவித்திருந்தார். கைலாசா ரிசர்வ் வங்கி என்று பெயரிடப்பட்ட அந்த வங்கிக்கான நாணயங்கள் விநாயகர் சதுர்த்தியான இன்று வெளியிடப்படும் என்று ஏற்கனவே அறிவித்திருந்த நிலையில் அவர் புதிய நாணயங்களை வெளியிட்டுள்ளார்.
அடுத்ததாக கைலாசாவுக்கான கடவுச்சீட்டு தொடர்பான விவரங்களையும் விரைவில் வெளியிடுவேன் என்று அவர் தெரிவித்தார். (ம)

## இருட்டில்....

டுத்தது. இதன்போது குழுவின் அதிகாரிகள் கட்டுப்பாட்டு மையத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்ற விதம் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். இந்தக் குழுவால் தயாரிக்கப்படவுள்ள அறிக்கை நாளைமறுதினம் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் டளஸ் அழகப்பெருமவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ம)

## அடிகாயங்களுடன்...

குச் சென்ற பொலிசார் சடலத்தினை அடையாளப்படுத்தியதுடன் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.
குறித்த சடலத்தில் அடிகாயங்கள் காணப்படுகின்ற நிலையில் கொலை என்ற ரீதியில் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். 70 வயதுடைய இந்திரகுமார் என்ற முதியவரே சடலமாக மீட்கப்பட்டார். (ம-110)

## கேப்பாபிலவில்...

சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.
மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து இலங்கைக்கு வருகைந்த 257 பேர் கடந்த 9ஆம் திகதி கேப்பாபிலவு விமானப்படைத்தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டனர். இவர்களில் ஒரு தொகுதியினருக்கு நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலும் வேறு ஒரு தொகுதியினருக்கு தெற்கின் முல்லேரியா மருத்துவமனையிலும் சோதனை மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணம் போதனாவில் சோதிக்கப்பட்டவர்களில் 6 பேருக்கும் மில்லேரியாவில் சோதிக்கப்பட்டவர்களில் 12 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-19)

## 'கோப்' நடவடிக்கை...

அத்துடன் இந்த இரண்டு குழுக்களுடன் நாடாளுமன்ற விசேட செயற்பாடுகளுக்கான தெரிவுக்குழுவின் பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்படவுள்ளனர் என அனைத்து கட்சிகளிடம் இருந்து பெயர் பட்டியல் கோரப்பட்டுள்ளது. நேற்றுக் கூடிய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
எனினும் கோப் மற்றும் கோபா ஆகிய இரண்டு குழுக்களின் தலைமைப் பதவிகளை எதிர்க்கட்சிக்கு வழங்குமாறு ஏற்கனவே கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.
அந்த கோரிக்கை நேற்றுமுன்தினம் கூடிய நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவால் மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. (ம)

# ரஷ்யாவின் தடுப்பூசி: இலங்கையில் பாவனைக்கு!

## சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.22

கொவிட்19 கட்டுப்படுத்தலுக்காக ரஷ்யா கண்டுபிடித்துள்ள தடுப்பூசி தொடர்பில் உலக சுகாதார நிறுவனம் உரிய பரிந்துரைகளையும் அனுமதியையும் வழங்கிய பின்னர், அதனை இலங்கையிலும் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இலங்கைக்கான ரஷ்ய தூதுவரிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரி பிமதேரி மற்றும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோருக்கிடையில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொவிட்19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த வழிமுறைகளால் வெற்றிகரமாக அதனை எதிர்கொள்ள முடிந்தது என்று தெரிவித்த ரஷ்ய தூதுவர், இதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு பாராட்டுக்களைத் தெரிவித்த



அத்துடன் சிகிச்சை மற்றும் கட்டுப்படுத்தலுக்காக ரஷ்யா கண்டுபிடித்துள்ள தடுப்பூசி குறித்து அமைச்சரிடம் தெளிவுபடுத்தினார்.

இந்த தடுப்பூசி தொடர்பில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் பரிந்துரை மற்றும் அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் இலங்கையில் கொவிட்19 கட்டுப்பாடு மற்றும் சிகிச்சைக்காக இதனைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தூதுவரிடம் சுட்டிக்காட்டியதுடன், இலங்கையில் மருத்துவர்களை உருவாக்குவதற்கு ரஷ்யா வழங்கியுள்ள உதவிகளுக்கு ரஷ்ய தூதுவரிடம் நன்றியும் தெரிவித்தார்.

இதுதொடர்பில் கருத்து தெரிவித்த ரஷ்ய தூதுவர், இரு நாடுகளுக்குமிடையில் நீண்ட காலமாகத் தொடர்கின்ற நட்புறவின் பிரதிபலனாக இலங்கையின் வைத்தியர்கள் மற்றும் ஏனைய துறை நிபுணர்களின் கல்விக்காக ரஷ்யாவின் உதவித்திட்டத்தை விரைவில் ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம் எனக் குறிப்பிட்டார். (ரி3)

# விபத்தை ஏற்படுத்திய சாரதிக்கு பிணை

கொடிகாமம், ஓக. 22

கொடிகாமம் சந்தியில் விபத்தை ஏற்படுத்திய பஸ் சாரதி 2 இலட்சம் ரூபா ஆள்பிணையில் நேற்று விடுவிக்கப்பட்டார்.

மஞ்சள் கோட்டில் நடந்து சென்ற குடும்பஸ்தர் ஒருவரை யாழ்ப்பாணத்தில் இருந்து தங்காலைக்குச் சென்ற தனியார் பஸ் மோதி விபத்துக்குள்ளாக்கிய சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றிருந்தது.

இது தொடர்பாக கைதுசெய்யப்பட்ட பஸ் சாரதி கொடிகாமம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது 2 லட்சம் ரூபா ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டார். (ரி1-159)

# கேரளா கஞ்சா வைத்திருந்தவர் நேற்றுக் கைது!

கிளிநொச்சி, ஓக.22

கேரளா கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தருமபுரம் பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 15 கிராம் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தவர் பொலிஸ் விசேட பிரிவினரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் அவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என தருமபுரம் பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (ரி1-6)





அனலைதீவு அருணோதய சனசமூக நிலையத்தினால் உருவாக்கப்பட்ட அருணோதய கல்வி மேம்பாட்டுக் கழக கட்டடம் நேற்று அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலய அதிபர் நா.இராதாகிருஷ்ணனால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு சனசமூக நிலை யத் தலைவர் இ.அனோராஜ் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அனலைதீவு தெற்கு அ.த.க.பாடசாலை அதிபர், அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலை அதிபர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ரி2-9)

# நிஷாந்தவை இலங்கைக்கு அனுப்ப வேண்டாம்

## அரச சார்பற்ற அமைப்புகள் கோரிக்கை

கொழும்பு, ஓக.22

நிஷாந்த சில்வாவை இலங்கைக்கு அனுப்ப அனுமதி வழங்கவேண்டாம் என அரச சார்பற்ற அமைப்புகள் சில, ஜெனிவா மனித உரிமை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

சுவிற்சர்லாந்தில் அரசியல் தஞ்சம் பெற்றுள்ள குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் முன்னாள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த சில்வா, சூரிச் நகரில் அரச வீடொன்றில் குடும்பத்தினருடன் வசித்து வருவதாக தெரிவிக்கப்படும் நிலையில், அவரை கண்ட இடத்தில் கைதுசெய்ய சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், இலங்கையில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் மூன்று பிரதானிகள் கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரக அதிகாரிகளைச் சந்தித்து அவரை இலங்கைக்கு அனுப்புவதைத் தவிர்க்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, நிஷாந்த சில்வாவை இலங்கையிடம் கையளிக்க சுவிஸ் அரசாங்கம் மறுத்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. சுவிற்ஸர்லாந்து அரசு நிஷாந்த சில்வாவுக்கு மேலதிகமாக இன்னுமொரு இலங்கைத் தூதரக அதிகாரி மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயம்பதி விக்ரமரத்ன ஆகியோரையும் சுவிஸில் தங்கியிருக்க அனுமதி வழங்கியுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ரி3)

# நாட்டில் நேற்றும் 23 தொற்றாளர்கள்

கொழும்பு, ஓக.22

இலங்கைக்குள் கொரோனாத் தொற்றாளிகளின் எண்ணிக்கை 2941ஆக உயர்ந்துள்ளது. நேற்று மாத்திரம் 23பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இனங் காணப்பட்டுள்ளனர். இதில் 18பேர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து வந்தவர்கள். ஒருவர் இந்தோனேசியாவிலும் ஒருவர் குவைத்திலும் இருந்து வந்தவர்கள். சென்னையில் இருந்து வந்த இருவரும், துருக்கியில் இருந்து வந்த ஒருவரும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். இந் நிலையில் வைத்தியசாலைகளில் 141பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் கொரோனாத் தொற்றில் இருந்து குணமானோரின் எண்ணிக்கை 2789ஆக உயர்ந்துள்ளது. (ரி1)

# செல்வச்சந்நிதி ஆலயத்தில் தொற்று நீக்கம் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஓக.22

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயப் பகுதியில் கிருமித் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது. செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இடம்பெற்று வருகிறது. தற்போது நாட்டிலுள்ள கொரோனாத் தொற்று அச்சம் காரணமாக ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி சமூக இடைவெளியை பேணி ஆலய உற்சவத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



நாட்டின் அனைத்துப் பகுதியிலுமிருந்தும் அடியவர்கள் ஆலய உற்சவத்தில் கலந்து கொள்வதால் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தும் முகமாக வல்வெட்டித்துறை நகரசபையின் சுகாதார பிரிவினரால் ஆலயப் பகுதியில் கிருமித் தொற்று நீக்கம் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது. கிருமித்தொற்று நீக்கம் செயற்பாடு இரவு வேளைகளில் ஆலயத்தின் உட்புறம் மற்றும் வெளி வீதிகளில் முன் னெடுக்கப்படுகிறது. (ரி1-20)



## ஆளும் கட்சியின் கொறடா; டிலான், ஜயந்த நியமனம்

கொழும்பு, ஓக.22

நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியின் பிரதி கொறடாவாக நாடாளுமன்ற உறுப்பினர்களான டிலான் பெரேரா மற்றும் ஜயந்த கெடகொட ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம், ஆளும் கட்சியின் உதவிக் கொறடாவாக நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜகத் புஷ்பகுமார, மொஹம்மட் முஸம்மில் மற்றும் அசங்க நவரத்ன ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தப் பதவிகளுக்கு அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், ஆளும் கட்சியின் பிரதம கொறடா நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜொன்ஸ்டன் பெர்னாண்டோ முன்னிலையில், இவர்கள் அனைவரும் நேற்று பதவியேற்றுக்கொண்டனர். (ரி2)

## விபத்தில் இருவர் பலி

கொழும்பு, ஓக.22

எல்ல ராவண எல்ல பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் 2 பேர் உயிரிழந்துள்ளதுடன், 3 பேர் காயமடைந்துள்ளார்கள். விபத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி2)

### கிளிநொச்சியில்

## உயர் கல்வியை தொடரும் புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு

கிளிநொச்சி, ஓக.22

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் உயர் கல்வியை தொடரும் புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வானது காலை 10 மணியளவில் பாடசாலை அதிபர் எஸ்.பூலோகராஜா தலைமையில் இடம்பெற்றது.

விசேட வழிபாட்டைத் தொடர்ந்து மாணவர்கள், விருந்தினர்கள் உள்ளிட்டோர் இசை வாத்திய அணிவகுப்புடன் அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து மங்கல விளக்கேற்றலு டன் நிகழ்வு ஆரம்பமானது. இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், வலயக் கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது 2020 ஆம் ஆண்டில் உயர்கல்வியைத் தொடர்வதற்காக தம்மைத் தயார்படுத்திக்கொண்ட பாடசாலை மாணவர்கள் வரவேற்கப்பட்டனர். அவர்களுக்கு ஆசீர்வாதங்களும் வழங்கப்பட்டது. (ரி2)

## சாகல ரத்நாயக்கவிடம் 10 மணி நேர வாக்குமூலம்

கொழும்பு, ஓக.22

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையான முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவிடம் சுமார் 10 மணி நேர நீண்ட வாக்கு மூலம் நேற்று பதிவுசெய்யப்பட்டது.

நேற்றைய தினம் இந்த ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகும்படி முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க, முன்னாள் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்னாயக்க ஆகியோருக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் தன்னால் இன்றைய தினம் முன்னிலையாக முடியாது என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆணைக்குழுவுக்கு அறிவித்து, தனக்கு இந்த மாதம் 31 ஆம் திகதி முன்னிலையாக அனுமதி வழங்குமாறு கோரியுள்ளார்.

இந்த நிலையில் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகிய சாகல ரத்நாயக்கவிடம் 10 மணி நேர நீண்ட வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

## பாடசாலைகளுக்கு பயன்தரு மரங்கள்

கரணவாய், ஓக.22

இமையாணன் அ.த.க வித்தியாலயத்திற்கு ஒரு தொகுதி மரக்கன்றுகள் அதிபர் இ. சிவசங்கரிடம் இமையாணன் நண்பர்கள் அமைப்பினரால் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. மரநடுகையை ஊக்குவிக்கும் முகமாக இமையாணன் நண்பர்கள் அமைப்பினால் வடமராட்சி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு தலா 10 பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி1-108)






## கட்டுநாயக்க விமான நிலைய அபிவிருத்தி: ஒப்பந்தக் கம்பனிகள் கறுப்புப் பட்டியலில்?

கொழும்பு, ஓக.22

கட்டுநாயக்க விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டங்களை உரிய தினத்திற்குள் பூர்த்தி செய்யாத ஒப்பந்தக் கம்பனிகளை கறுப்புப் பட்டியலில் சேர்த்து அவற்றுக்கான கொடுப்பனவுகளை இடைநிறுத்துமாறு சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, விமான நிலைய அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கியுள்ளார்.

விமான நிலையத்தின் இரண்டாவது ஓடுதளம் மற்றும் பயணிகள் முனையத்தை அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தச் செயற்றிட்டம் விமான நிலையத்தின் மிகப்பெரிய செயற்திட்டம் என சுட்டிக்காட்டிய அமைச்சர், இதனை விரைவில் பூர்த்திசெய்வது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். அந்தக் கட்டுமான நிறுவனங்களுக்கு தமது வேலைகளைப் பூர்த்திசெய்வதற்காக, தொடர்ந்தும் மேலதிக காலத்தை வழங்க வேண்டாம் என்றார். மேலும் விமான நிலையத்தின் நடைமுறைச் செயற்றிட்டத்தை மூன்று வாரங்களுக்குள் தன்னிடம் ஒப்படைக்குமாறும் அமைச்சர் பணிப்புரை வழங்கியுள்ளார். (ரி3)

## வவுனியா வடக்கு மக்களின்
# உற்பத்தியை ஊக்குவிக்க சுழற்சி முறையில் கடன்

வவுனியா, ஓக.22

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக விவசாய உற்பத்தியை ஊக்குவிக்கும் சுழற்சி முறை கடன் திட்டத்தின் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை நெடுங்கேணி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

இத் திட்டத்திற்கான நிதியை லண்டன் V4U அமைப்பும் நெதர்லாந்து CSNHA அமைப்பும் இணைந்து வடமாகாண சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தினூடாக வவுனியா மாவட்ட சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு நான்கு சி.க.கூ. சங்கங்களினூடாக வழங்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக நெடுங்கேணி சி.க.கூ. சங்கத்தின் 10



பயனாளிகளுக்கு ரூபா 353,826 தொகையை வழங்கும் நிகழ்வு சங்கத்தின் தலைவர் ஜெ. கமலநாதன் தலைமையில் நடைபெற்றுள்ளது. இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்க சமாசத்தின் தலைவர் அ.ச.பாரதி ஆனந்தம் இயக்குநர் சபை உறுப்பினர் சி.சிவசேக ரம், செயலாளர் நி.சுரேஸ், உள்ளகக் கணக்காய்வாளர் ந. நந்தகுமார், வெளிக்கள அலுவலர்கள் மற்றும் V4U நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி சு.செல்வராசா ஆகியோரும் நெடுங்கேணி சி.க.கூ. சங்கத்தின் பொருளாளர், செயலாளர், நிர்வாக சபை, உறுப்பினர்கள் மற்றும் சங் கத்தின் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ரி3-222)

## துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்தவர் உயிரிழப்பு

அம்பலாங்கொடை சந்திக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நபர் வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந் தெரியாத நபர்களினாலேயே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 48 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி3)

## வாகன விபத்தில் ஐவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக.22

மரணவீட்டுக்குச் சென்றுவிட்டு குருநாகல் நோக்கி பயணித்த கார் வலக்கும்புர பகுதியில் விபத்துக்குள்ளானதில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து கொழும்பு குருநாகல் பிரதான வீதியின், சிலாபம் வலக்கும்புர பகுதியில் இன்று அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

டிப்பர் ரக வாகனம் ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதன்போது காரில் பயணித்தவர்களே உயிரிழந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துத் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி2)

## சட்டவிரோத சுருட்டு உற்பத்தி; பத்து பேர் நேற்றுக் கைது

ஹற்றன், ஓக.22

சட்டவிரோதமான முறையில் சுருட்டுகளைத் தயாரித்து தோட்டப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு விற்பனை செய்த பத்து பேர் ஹற்றன் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஹற்றன் மதுவரித் திணைக்களத்துக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய நேற்று மாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது கைதான சந்தேகநபர்களிடமிருந்து சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட 32,684 சுருட்டுகள் மீட்கப்பட்டமையுடன், ஒரு சுருட்டு பத்து ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் விற்பனை செய்யப்பட்ட சுருட்டுகளில் லேபல் எதுவும் ஒட்டப்பட்டிருக்கவில்லை எனவும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதானவர்கள் ஹற்றன், தலவாக்கலை, கொட்டகலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும், விசாரணைகளை அடுத்து இவர்களை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (ரி3)

## புதிய முகத்துவாரம் சுரங்கப்பாதை கட்டுமானப் பணிகள் நிறைவு

கொழும்பு, ஓக.22

கொழும்பு வடக்கு புதிய முகத்துவாரம் சுரங்கப் பாதை நிர்மாணப் பணி நிறைவடைந்துள்ளது என பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமரின் வழிகாட்டுதலுடன் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கொழும்பு பெருநகரை அண்மித்த நகர அபிவிருத்தி திட்டமாக இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தால் இந்தத் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

அலுத்மாவத்தை பிரதான கால்வாயுடன் இணைக்கப்பட்டு ஆரம்பமாகும் இந்த சுரங்கப்பாதை புதிய முகத்துவாரம் பகுதி ஊடாக நிலத்தடி வழியாகச் சென்று முகத்துவாரம் மீன்பிடி துறைமுகத்திற்கு அருகில் கடலுக்குள் திறக்கப்படுகிறது. 778 மீற்றர் நீளமும் 3 மீற்றர் விட்டமும் கொண்ட இந்த சுரங்கப் பாதையின் உள்ளே ஒரு திடமான கொங்கிறீட் புறணி அமைக்கப்பட்டுள்ளது. அத் திட்டத்தின் நிறைவில் ஒரு நிலத்தடி சுரங்கப்பாதை என்ற வகையில் வினாடிக்கு 15,000 லீற்றர் நீர் கடலுக்குள் விடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு வடக்கு பகுதியில் நீண்டகாலமாக நிலவிய வெள்ள அனர்த்த நிலைமையைக் கட்டுப்படுத்தும் வகையிலான நிரந்தரத் தீர்வாக புதிய முகத்துவாரம் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி3)

## கொவிட்–19 நிதிய வைப்பு மீதி 1,567 மில்லியனாக அதிகரிப்பு

கொழும்பு, ஓக.22

தனிப்பட்ட நிறுவன அன்பளிப்புக்கள் மற்றும் நேரடி வைப்புகளுடன் 'இடுகம' கொவிட் 19 சுகாதார, சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி 1,567 மில்லியனாக அதிகரித்துள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடையாளர்கள் இக் கணக்கிக்கு பங்களிப்புச் செய்துவருகின்றனர்.

பங்களிப்புச் செய்வோர் காசோலைகள், டெலிகிராம்கள் மற்றும் இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது #207# என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டோ அன்பளிப்புச் செய்யமுடியும். 07607 00700/ 0112320880/ 0112354340/ 0112424012 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (ரி2)



ஊர்காவற்றுறை பிரதேச இளைஞர் கழகங்களுக்கிடையில் நேற்று குழுநிலைப் போட்டிகள் நடத்தப்பட்டன. இந்தக் குழு நிலைப் போட்டிகளில் கபடி மற்றும் கரப்பந்து போட்டிகள் முறையே அனலைதீவு அருணோதய, இளைஞர் அணியினர் முதலாம் மற்றும் இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளனர். (ரி2-9)

# கல்லுண்டாய் வீதியிலும் வழிப்பறிக் கொள்ளை!

## இளம் பெண்ணின் தங்கச் சங்கிலி இன்று அறுப்பு

யாழ்ப்பாணம், ஓக. 23

சமீப காலமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடந்தேறிவரும் வழிப்பறிக்கொள்ளை, யாழ்ப் பாணம் கல்லுண்டாய் வீதியிலும் ஆரம்பித்துள்ளது. இன்று காலை அந்த வீதியில் இளம் பெண் ஒருவருடைய தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளில் வழிப் பறிக்கொள்ளைகள் இடம்பெற்றுவருகின்றன. தனியாக வீதியால் செல்லும் பெண்கள், வயோதிபர்கள் இலக்கு வைக்கப்பட்டு, அவர்கள் அணிந்திருக்கும் தங்க ஆபரணங்கள் கொள்ளையடிக் கப்படுகின்றன. இந்தச் சம்ப வங்களின் போது உயிர் ஆபத் துக்களும் ஏற்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் நவாலி வீதியில் கடந்த காலங்களில் வழிப்பறிக் கொள்ளையரின் அட்டகாசம் அதிகரித்திருந்தது. அந்த வீதியால் பயணிப்போர் பீதியுடனேயே பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. இது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த போதும் கொள்ளையர்கள் தப்பித்துச் சென்றுவிடுவர். இந்தக் கொள்ளைச் சம்பவம் தற்போது கல்லுண்டாய் வீதியிலும் ஆரம்பித்துள்ளது.

அந்த வீதியின் அகலிப்பு பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. வீதிச் சீரமைப்பு பணியாளர்கள் ஆங்காங்கே நடமாடுகின்ற போதும் கொள்ளையர்கள் தமது கைவரிசையைக் காட்டத் தவறவில்லை. இன்று காலை யாழ்ப்பாணத்துக்கு வேலைக்காக வந்த இளம் பெண் ஒருவருடைய தங்கச் சங்கிலி குறித்த வீதியில் கொள்ளையர்களால் அறுத்துச் செல லப்பட்டுள்ளது. செட்டியார் மடச் சந்திக்கு அருகில் உள்ள பாலத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சங்கிலியை அறுத்துள்ளனர். இதன்போது அந்தப் பெண்ணின் கழுத்தில் நகக் கீறல்களும் ஏற்பட்டுள்ளன. சுழிபுரம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இந்த அவலத்துக்கு உள்ளானார். சம்பவம் தொடர்பில் அவர் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டையும் பதிவு செய்தார். அந்த வீதியால் தனிமையில் பயணிக்கும் பெண்கள் அவதானமாகப் பயணங்களை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப-21)

## புதையல் தோண்டிய நால்வர் கைது

அம்பாறை, திசாபுர பகுதியில் புராதன புதையல் பொருள்களைத் தோண்டிய நால்வர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர் என அம்பாறை பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிருந்து வான் ரக வாகனமொன்றும், புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களும், ஆயுதங்கள் சிலவும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் தேவிநுவர, குடவெல மற்றும் மீதினிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (ரி1)

## மிதக்கும் வர்த்தகத் தொகுதியை உடன் புனரமைக்க நடவடிக்கை

கொழும்பு, ஓக.22

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய கோட்டை மிதக்கும் வர்த்தக தொகுதியை உடனடியாக புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேராவின் தலைமையில் புனரமைப்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. கடந்த நான்கரை வருடங்களாக கோட்டை மிதக்கும் சந்தைத் தொகுதி உரிய முறையில் பராமரிக்கப்படாமையினால் அங்குள்ள நூற்றுக்கு 80 வீதமான கடைகளை மூட நேரிட்டது என கடை உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். மிதக்கும் சந்தை உள்ள ஏரியின் நீர் சுத்தமாக இல்லாமையினால் கடந்த நாள்களாக சுற்றுச் சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றதை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# சவூதியில் பணிபுரிந்த இலங்கையர் சுயநினைவற்ற நிலையில் நாட்டுக்கு!

### சிறப்பு விமானம் மூலம் அனுப்பிவைப்பு

கொழும்பு, ஓக.22

சவூதி அரேபியாவில் பணிபுரிந்த இலங்கையர் ஒருவர் சுயநினைவற்ற நிலையில் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இந்த நபர் சிறப்பு விமானம் மூலமாக கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளார்.

சவூதி அரேபியாவின் ஹல்ப் வெஸ்ற் நிறுவனத்தில் பணியாற்றிய கடவத்தையைச் சேர்ந்த என்ரூ ரொஹான் என்ற இலங்கையர் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் சுகவீனமடைந்தமையால் சுயநினைவற்ற நிலையில் சவூதியில் சிகிச்சைபெற்று வந்துள்ளார்.

ரொஹானின் குடும்பத்தினர் விடுத்த கோரிக்கைக்கு அமைய மனிதாபிமான அடிப்படையில் அவருக்கென முன்பதிவு செய்யப்பட்ட தனியார் ஜெட் விமானத்தில் அவர் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இதற்காக ஹல்ப்வெஸ்ற் நிறுவனம் 1.5 கோடி ரூபா செலவழித்துள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கமைய நேற்றுக் காலை சவூதியின் தனியார் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அவர் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அவருக்காக கொழும்பு வைத்தியசாலையில் தாதி மற்றும் வைத்தியர்கள் நியமிக்கப்பட்டு சிகிச்சையளிப்பதாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். அத்துடன் ஹல்ப்வெஸ்ற் நிறுவன உரிமையாளருக்கு அவரின் குடும்பத்தினர் நன்றியையும் தெரிவித்துள்ளனர். (ரி3)

## சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பக் காலம் நீடிப்பு

கொழும்பு, ஓக.22

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்கும் கால எல்லை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது எனப் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் நாயகம் சனத் பி. பூஜித்த தெரிவித்துள்ளார். இதன்படி, எதிர்வரும் 31 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமென பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். மேலும், இன்றுடன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் திகதி நிறைவடையவிருந்த நிலையிலேயே இக் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். பாடசாலைப் பரீட்சார்த்திகள் அதிபர் ஊடாகவும் தனியார் பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக்களத்தின் ஆலோசனைகளுக்கமையவும் விண்ணப்பிக்குமாறு அவர் தெளிவுபடுத்தியுள்ளார். (ரி1)





## ஓடிக்கொண்டிருந்தபோது பற்றி எரிந்த முச்சக்கரவண்டி

பொகவந்தலாவை, ஓக.22

ஹற்றனில் இருந்து பொகவந்தலாவை நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டியொன்று திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது எனப் பொகவந்தலாவைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று பொகவந்தலாவை, வானகாடு ரொப்கில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தத் தீ விபத்தினால் முச்சக்கரவண்டி முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளதுடன், பயணித்தவர்களுக்கு எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த விபத்துத் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ரி2)

## சௌபாக்கியா கடனுக்கான விண்ணப்ப காலம் நீடிப்பு

கொழும்பு, ஓக.22

கொரோனாத் தொற்று காரணமாக வர்த்தகத்தில் நட்டமடைந்தவர்கள் “சௌபாக்கியா” திட்டத்தின் கீழ் வங்கிகளில் 4 வீத மூலதனக் கடனைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பக் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி மூலதனக் கடன்களுக்கான விண்ணப்பங்களை 2020 செப்ரெம்பர் 30 வரை வர்த்தகர்கள் வங்கிகளில் சமர்ப்பிக்க முடியும் என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது. இந்தக் கடன் திட்டத்தின் கீழ் 36,489 விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த ரூ 100,017 மில்லியன் மதிப்புள்ள கடன்களுக்கு மத்திய வங்கி 2020 ஓகஸ்ட் 18ஆம் திகதிவரை ஒப்புதல் அளித்துள்ளது. (ரி1)






# ரஷ்ய எதிர்க்கட்சி தலைவருக்கு விஷம் கலந்து கொடுக்கப்பட்டதா?

## கோமா நிலையில் அவர் வைத்தியசாலையில்!

மொஸ்கோ, ஒக.22

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி விளாடிமிர் புடினின் தீவிர விமர்சகருமான அலெக்ஸே நவால்னிக்கு விஷம் கலந்துகொடுக்கப்பட்டுள்ளது என அவரது செய்தித்தொடர்பாளரான யர்மிஷ் ட்விட்டரில் பதிவிட்டுள்ளார். ரஷ்யாவின் டாம்ஸ்க் நகரிலிருந்து தலைநகர் மொஸ்கோவிற்கு விமானத்தில் சென்றுகொண்டிருந்த போது நவால்னி திடீரென மயக்க நிலைக்குச் சென்றுள்ளார் எனக் கூறப்படுகிறது. இதையடுத்து, அந்த விமானம் அவசரமாக சைபீரியாவின் ஓம்ஸ்க் நகரில் தரையிறக்கப்பட்டது. சுயநினைவு இழந்த நிலையில் இருக்கும் அலெக்ஸே விமானத்திலிருந்து அவசர மருத்துவ ஊர்தியில் ஏற்றப்படும் காணொலி ஒன்று சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவி வருகிறது. மேலும், அதே விமானத்திலிருந்த சக பயணி ஒருவர் அலெக்ஸே வலியால் துடித்ததை தான் கேட்டேன் எனத் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட அலெக்ஸேவுக்கு வென்டிலேட்டர் பொருத்தப்பட்டுள்ளது எனவும் அவர் கோமா நிலையில் உள்ளார் எனவும் அவரது செய்தித்தொடர்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். இதையடுத்து மருத்துவமனைக்கு வந்த பொலிஸார் அலெக்ஸேக்கு சொந்தமான பொருள்களைப் பறிமுதல் செய்தனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். நவால்னியின் மனைவி யூலியாவை, உள்ளே அனுமதிக்க முதலில் மறுப்பு தெரிவித்த அதிகாரிகள், பிறகு அனுமதி வழங்கினர். இந்த நிலையில், அலெக்ஸேயின் உடல்நிலை குறித்த விவரங்களை வழங்குவதற்கு மருத்துவமனை நிர்வாகம் மறுத்து வருகிறது என அவரது தனிப்பட்ட மருத்துவர் அனஸ்தேசியா வாசிலியேவா தெரிவித்துள்ளார். 44 வயதான நவால்னி , உயர் அதிகாரிகளுக்கு எதிரான ஊழல் எதிர்ப்பு பிரசாரங்களில் ஈடுபட்டு வந்தவர் என்பதுடன் ஜனாதிபதி விளாடிமிர் புடினை வெளிப்படையாக விமர்சித்து வந்தார். இதற்காக கடந்த காலங்களில் அவர் மீது உடல் ரீதியான தாக்குதல்கள் நடாத்தப்பட்டமையுடன், பல தடவைகள் கைது செய்யப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ரி-1)



# சகோதரிக்கு அதிகாரமளித்தார் ஜனாதிபதி கிம் ஜாங்உன்

பியொங்யாங் ,ஒக.22

வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங்உன், தனது சகோதரி கிம் யோஜாங் உட்பட அவரது உதவியாளர்களுக்கு கூடுதல் அதிகாரங்களை ஒப்படைத்துள்ளார் என்று தென் கொரியாவின் உளவு நிறுவனம் தெரிவித்துள்ளது. அதே சமயத்தில், கிம் வசமே நாட்டின் "முழுமையான அதிகாரம்" உள்ளது.

இதனால் அவரது மன அழுத்த அளவைக் குறைக்க பல்வேறு கொள்கை துறைகளை ஏனையவர்களிடம் ஒப்படைத்துள்ளார் என அந்த உளவு நிறுவனம் தெரிவித்துள்ளது. உளவுத்துறை அறிக்கையின்படி, அமெரிக்கா மற்றும் தென் கொரியாவுடனான தேசத்தின் உறவுகளுக்கு தற்போது கிம் யோஜாங் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அத்துடன் பொருளாதார மற்றும் இராணுவக் கொள்கை குறித்த கூடுதல் அதிகாரம் பல மூத்த அதிகாரிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரி1)

# 38 லட்சம் அமெ. வீடியோக்களை நீக்கியது டிக்டொக் நிறுவனம்

நியூயோர்க், ஒக.22




அமெரிக்காவில், பகைமையைத் தூண்டுகிறது எனக் கருதப்படும் சுமார் 380,000 காணொலிகள் அகற்றப்பட்டுள்ளன என டிக்டொக் நிறுவனம் தெரிவித்துள்ளது. சீனாவின் பிட்டான்ஸ் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்ட டிக் டாக் செயலியானது வெறுப்பைத் தூண்டும் உள்ளடக்கத்தைக் கொண்டிருந்த 1,300க்கும் மேற்பட்ட கணக்குகளுக்கும் தடைவிதித்துள்ளது.

இனம் சார்ந்த துன்புறுத்தலைத் தூண்டும் காணொலிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கத் தயங்கப்போவதில்லை என்றும் வெறுப்பைத் தூண்டும் குழுக்கள் அல்லது வரலாற்றில் நேர்ந்த கொடுமைகளை மறுப்பதைச் சகித்துக்கொள்ளப் போவதில்லை என்றும் டிக்டொக் நிறுவனம் தெரிவித்துள்ளது. (ரி1)

# பெலாரஸ் மீது பொருளாதாரத் தடை

பெலாரஸ் இராச்சியத்துக்கு எதிராக பொருளாதார தடை விதிக்க ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.
பெலாரஸ் ஜனாதிபதி எலெக்சாண்டர் லுக்காஷென்கோவிற்கு எதிராக முன்வைக்கப் பட்டுள்ள தேர்தல் மோசடி குற்றச்சாட்டுக் கள் காரணமாக அவருக்கு எதிராக இடம்பெற்று வரும் ஆர்ப்பாட்டங் கள் தீவிரம டைந்துள்ளன.
அடுத்த சில நாள்களில் நாடு முழுவதிலும் தொடர் வேலைநிறுத்தங்கள் முன்னெடுக்கப்படும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் எச்சரித்துள்ளனர். (ரி1)

# பெண் செயற்பாட்டாளர் ஈராக்கில் சுட்டுக்கொலை



பாக்தாத், ஒக.22

ஈராக்கின் பஸ்ரா நகரில் பெண் அரசியல் செயற்பாட்டாளர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். ஒரு வாரத்திற்குள் பதிவாகிய மூன்றாவது சம்பவமாக இது அமைந்துள்ளது. உள்ளூர் அரசியல் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடும் மருத்துவர் ஒருவரான ரிஹாம் யாகூப் என்பவர் கடந்த புதனன்று அடையாளம் காணப்படாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.


டஹ்சீம் ஒசாமா என்ற மற்றொரு செயற்பாட்டாளர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து பஸ்ரா நகரில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. பிறிதொரு சம்பவத்தில் காரில் சென்றுகொண்டிருந்த மற்றொரு செயற்பாட்டாளர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். இந்நிலையில் பஸ்ரா பொலிஸ் பிரதானி மற்றும் ஏனைய பாதுகாப்பு அதிகாரிகளை பிரதமர் முஸ்தபா அல் காதிமி பணி நீக்கம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரி1)



# வீட்டிலேயே மாடித் தோட்டம் : அசத்தும் சமந்தா

தமிழ், தெலுங்கில் நடித்து வரும் சமந்தா, கொரோனா ஊரடங்கு காலத்தில் வீட்டில் இருந்தபடியே மாடித்தோட்டம் அமைத்து வீட்டுக்குத் தேவையான காய்கறிகளை அவரே அறுவடை செய்து வருகிறார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட வீடியோவில், இதுபோன்று நீங்களும் உண்ணும் உணவை வீட்டிலேயே விவசாயம் செய்யுங்கள் எனக் கூறினார்.





# பார்படாஸை வீழ்த்தி செயின்ட் லூசியா வெற்றி



புதுடில்லி, ஓக.22

கரீபியன் பிரிமீயர் லீக் தொடரில் பார்படாஸ் டிரைடன்ஸ் அணியை 7 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தி, செயின்ட் லூசியா சாக்ஸ் அணி முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளது. கரீபியன் பிரிமீயர் லீக்கின் 5 ஆவது ஆட்டம் டிரினிடாடில் நேற்று நடைபெற்றது. செயின்ட் லூசியா சாக்ஸ் பார்படாஸ் டிரைடண்ட்ஸ் அணிகள் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பார்படாஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வுசெய்தது.

பார்படாஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரர்களான சார்ள்ஸ் 35 ஓட்டங்களும், கப்டன் ஹோல்டர் 27 ஓட்டங்களும் எடுத்தனர். மற்றைய வீரர்கள் நிலைத்து நின்று ஆடவில்லை.

பார்படாஸ் அணி 18.1 பந்துப் பரிமாற்றங்களில் 7 இலக்குகளுக்கு 131 ஓட்டங்கள் எடுத்துள்ள நிலையில் மழை குறுக்கிட்டது. இதையடுத்து, செயின்ட் லூசியா அணி 5 பந்துப்பரிமாற்றங்களில் 47 ஓட்டங்கள் எடுக்க வேண்டும் என்று இலக்கை நிர்ணயித்தது. அந்த அணி 4.1 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளுக்கு 50 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்று முதல் வெற்றியைப் பதிவு செய்தது. (ரி2)

# டுபாய் செல்லும் சென்னை வீரர்கள்



புதுடில்லி, ஓக.22

ஐ.பி.எல் போட்டியில் பங்கேற்பதற்காக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வீரர்கள் நேற்று டுபாய்க்கு புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக இந்த ஆண்டு ஐ.பி.எல் கிரிக்கெட் தொடர், ஐக்கிய அரபு அமீரகத்தில் நடைபெறவுள்ளது. செப்ரெம்பர் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தத் தொடர், நவம்பர் 10 ஆம் திகதி முடிவடைகிறது. துபாய், அபுதாபி, ஷார்ஜாவில் உள்ள மைதானங்களில் போட்டிகள் நடைபெறுகின்றன. இதற்காக அணி வீரர்கள் ஐக்கிய அரபு அமீரகத்துக்கு செல்ல ஆரம்பித்துள்ளனர். இந்த நிலையில், ஐ.பி.எல் தொடரில் விளையாட சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நேற்று மதியம் டுபாய்க்கு புறப்பட்டுச் சென்றது. சென்னையிலுள்ள நட்சத்திர ஹோட்டலில் இருந்து மதியம் டோனி உள்ளிட்ட வீரர்கள் விமான நிலையம் புறப்பட்டனர். அங்கிருந்து விமானம் மூலம் டுபாய் சென்றனர். (ரி2)



# இறுதிப்போட்டிக்குள் பேயர்ன் முனிச்

லிஸ்பன், ஓக.22

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் பேயர்ன் முனிச், லயன் கழகத்தை தோற்கடித்து 11 ஆவது முறையாக இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

கழக அணிகளுக்கிடையிலான ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டி போர்த்துக்கல் தலைநகர் லிஸ்பனில் நடைபெற்று வருகின்றது. இதில் கடந்த புதன்கிழமை இரவு நடந்த அரை இறுதி ஆட்டத்தில் 5 முறை சம்பியனான பேயர்ன் முனிச் (ஜேர்மனி) அணி 3:0 என்ற கோல் கணக்கில் லயன் கழகத்தை (பிரான்ஸ்) தோற்கடித்து 11 ஆவது முறையாக இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

பேயர்ன் முனிச் அணியில் செர்ஜ் ஞாப்ரி (18 மற்றும் 33 ஆவது நிமிடம்), ரொபர்ட் லெவன்டவ்ஸ்கி (88 ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்தனர். முதல் 15 நிமிடங்கள் எதிரணியின் கோல் கம்பத்தை அடிக்கடி முற்றுகையிட்ட லயன் வீரர்கள், அதன் பின்னர் பேயர்ன் முனிச் அணியின் ஆக்ரோஷத்துக்கு பணிந்து விட்டனர். கடைசியாக விளையாடிய 29 ஆட்டங்களில் பேயர்ன் முனிச் தோல்வியை சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நாளை ஞாயிறு நடக்கும் இறுதி ஆட்டத்தில் பேயர்ன் முனிச் அணி, பாரீஸ் செயின்ட் ஜெர்மைன் (பிரான்ஸ்) அணியை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ரி2)

# மலேரியாவை மறந்துவிடாதீர்!

## பில்கேட்ஸ் எச்சரிக்கை



உலகமே கொரோனா தொற்று, சமூக விலகல் என்று வெறும் கொரோனா பற்றிய பேச்சாக மட்டுமே இருக்கும் இந்தக் காலத்தில் மலேரியா என்னும் பெரும் தொற்றை நாம் மறந்துவிடக் கூடாது என்று மைக்ரோசொப்டின் அதிபர் பில்கேட்ஸ் தன் இணைய தளத்தில் தெரிவித்திருக்கிறார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாவுக்கு முன்னதாக மனிதர்களை கொத்துக்கொத்தாக காவு வாங்கிய கொடூரமான நோய் மலேரியா என்னும் பெரிய தொற்று நோய் தான் என்று பில்கேட்ஸ் கூறியுள்ளார். மலேரியா பற்றிய அச்சத்தையும் விழிப்புணர்வையும் மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.




கொரோனா வைரஸிடமிருந்து எம்மைக் காத்துக்கொள்ள நாம் அனைவரும் சமூக விலகலுடன் பாதுகாப்பாக இருக்கலாம்.

ஆனால், கொசுக்களுக்கு சமூக விலகல் எல்லாம் தெரியாது, முக்கியமாகக் கொசுக்கள் மு அணிவதில்லை. தற்போது கொரோனாவின் தாக்கத்தால் வசதியற்ற நாடுகளில், நுளம்பு வலைகள், மலேரியா குருதிச் சோதனைகள், மலேரியா எதிர்ப்பு மருந்துகள் போன்றவற்றை விநியோகிப்பதில் பெரிய தாமதம் ஏற்பட்டுள்ளது. இதனால், விரைவிலேயே மலேரியா காய்ச்சல் பெரிய உயிர்க்கொல்லியாக மாறும் ஆபத்து உள்ளது என பில்கேட்ஸ் எச்சரித்துள்ளார்.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 22.08.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.